# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2371/49 - 2024 පෙබරවාරි මස 16 වැනි සිකුරාදා - 2024.02.16

*2371/49 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் இலக்கப் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு 01,
2024, பெப்புருவரி 14.

**ஒழுங்குவிதிகள்**

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (ஒழுங்குவிதிகள்) கீழ் விடுக்கப்பட்ட, திருத்தப்பட்டவாறான 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/35 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :

ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பாகம் I இன் தலைப்பு ‘அ’ இன் கீழ், 4 ஆம் பந்தியின் துணைப்பந்தி (10) இன் (எ) விடயம், பின்வரும் ஏற்பாட்டினை, குறிப்பிட்ட பந்தியினை உடனடுத்துப் புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

(எ) பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்கள் தொடர்பிலான ஏதேனும் வருமானம் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகள் ............

“முதலீட்டினைப் பெற்றவர் போதுமான வெளிநாட்டுச் செலாவணி மீதியை/காசுப்பாய்ச்சலைக் கொண்டிருக்காத சந்தர்ப்பமொன்றில், மேலே சொல்லப்பட்ட பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களை அல்லது பட்டியலிடப்பட்ட பங்குகளின் வருமானத்தினை அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவுகளை இலங்கை ரூபாவினை மாற்றிக் கொள்வதன் மூலம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்”.

EOG 02-0133


1A - PG 6649 — 404 (2024/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*